## 147. நன்றி சொல்லுவேன்

### பல்லவி

நன்றி சொல்லுவேன் - 3 நானும் - (2)
என் தேவன் செய்த நன்மைகளை
நினைக்கும் போதெல்லாம்
நன்றி சொல்லுவேன் நானும் நன்றி சொல்லுவேன்

### சரணங்கள்

1. நான் கேட்டதையும் கேளாததையும்
கொடுக்கும் பரம தகப்பனே
நான் நினைத்ததையும் நினைக்காததையும்
வழங்கும் பாச தகப்பனே
- நன்றி சொல்லுவேன்

2. நான் கூப்பிடும்போது எனக்கு செவிகொடுக்கிறீர்
நான் நெருக்கப்படும் போது என்னை பார்க்கிறீர்
ஆரம்பம் அற்பமாக இருந்தாலும்
முடிவை சம்பூரணமாக்கிடுவீர்
- நன்றி சொல்லுவேன்

3. பாடுகளில் என்னை பழக்குவிக்கிறீர்
சோதனையில் சோர்வில்லாமல் இருக்க வைக்கிறீர்
அக்கினியில் என்னை புடமிடுகிறீர்
சுத்த பொன்னாக மாற்றி விடுகிறீர்
- நன்றி சொல்லுவேன்